தினமணி

டிசம்பர் 20, 2018

# பிளாஸ்டிக்கை ஒழிக்க பெரம்பலூர் வந்தது விழிப்புணர்வு பஸ்



தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விழிப்புணர்வு சிறப்பு பஸ் பெரம்பலூர் வந்ததையடுத்து, புது பஸ்ஸ்டாண்டில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வினியோகம் செய்யப்பட்டது.

பெரம்பலூர், டிச. 20-

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் சிறப்பு பஸ் நேற்று பெரம்பலூர் வந்தது.

மாசில்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் பிளாஸ்டிக்கை அறவே ஒழிக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி, தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து அவற்றின் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்குமாறு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அதற்கு மாற்றாக, பாக்கு மட்டைத் தட்டுகளையும், பனை, கரும்புச் சக்கை, காகிதம், மண் உள்ளிட்டவை மூலம் தயாரிக்கப்படும் பொருட்களை பயன்பாட்டில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரச்சார பஸ்ஸினை தமிழகம் முழுவதும் வலம் வரச்செய்ய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்தது. அதன்படி சிறப்பு பஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்தை கடந்த 10ம் தேதி சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து சிறப்பு பஸ் சென்னை, காஞ்சிபுரம், கடலூர், அரியலூர் வழியாக நேற்று பெரம்பலூர் வந்தடைந்தது.

பிரச்சார பஸ்சுக்கு பெரம்பலூர் இந்தோ டிரஸ்ட் தேசிய பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான பெரம்பலூர் புது பஸ்ஸ்டாண்ட், பழைய பஸ்ஸ்டாண்ட் ஆகிய பகுதிகளில், சென்னை மாசு கட்டுப்பாட்டு வாரிய தலைமை அலுவலக துணை மேலாளர் ராதாகிருஷ்ணன் தலைமையிலான அலுவலர்கள் பொது மக்களிடையே பிளாஸ்டிக் ஒழிப்பு துண்டு பிரசுரம் வினியோகம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

அப்போது ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் எவை என்பது குறித்து விரிவாக எடுத்துரைத்து, அப்பொருட்களுக்கு வரும் ஜன.1ம் தேதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது என கூறினர்.

மேலும் மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களுக்கு விழிப்புணர்வு பஸ் சென்று பொது மக்களிடையே பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். பின்னர் சிறப்பு பஸ் கரூர் புறப்பட்டது.